3. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN: I have to announce to the House that I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriaton Bill, 1975.

(2) பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN: I have to announce to the House that I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Appropriation Bill, 1975 (L.A. Bill No. 11 of 1975), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

(பிற்பகல் 3-40)

4. கவன ஈர்ப்பு.

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் தமிழில் தேர்வு எழுத அனுமதி கோரி கிளர்ச்சி.

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): தலைவரவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் தமிழில் தேர்வு எழுத அனுமதிக்கும் படி கோரி கிளர்ச்சி செய்ததனால் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலை குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டில், சென்னை சட்டக் கல்லூரியில், முதல் சட்ட வகுப்பில் ஒரு பிரிவிலும், இரண்டாம் சட்ட வகுப்பில் ஒரு பிரிவிலும் சோதனை முறைத் திட்டமாக, தமிழில் பாடங்கள் நடத்தப்பட்டன. இவ் வகுப்புக்களுக்குத் தேவையான பாட நூல்கள் தமிழில் இல்லை. இதனால் மாணவர்கள் ஆங்கில மொழி வகுப்புகளுக்கும் வந்து தேர்வுகளை ஆங்கிலத்திலேயே

எழுதினார்கள். இந்த ஆண்டிலும், தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுக் கொண்ட, முதலாண்டு, இரண்டாவது ஆண்டு சட்ட வகுப்புக்களிலும் ஒவ்வோர் பிரிவினைச் சார்ந்த நாற்பது மாணவர்களுக்குத் தமிழில் பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாணவர்கள் தமிழிலேயே தேர்வு எழுத அனுமதிக்க வேண்டுமென்று சென்னைப் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர்கள் ஒரு முடிவு எடுக்கும் வரை தேர்வுகள் தமிழில் நடத்தப்படும் என்று உறுதிமொழியளிக்க இயலா தென்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பல்கலைக் கழகம் தமிழில் தேர்வு எழுத ஏற்பாடுகள் செய்யவில்லையானால், ஆங்கில மொழி வகுப்புக் களுக்கு இம் மாணவர்கள் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சட்டக் கல்வி இயக்குநர் இது குறித்து 1974-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் தேதியில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எழுதினார். பிறகு அவர் இது குறித்துப் பல்கலைக் கழகத் துணை வேந்தர், தேர்வு ஆணையாளர், பதிவாளர் ஆகியோருடன் பேசினார். தமிழில் இவ்வகுப்பு களுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள் இல்லாததுதான் பல்கலைக் கழகத்தின் பிரச்சினை. இதற்குத் தேவையான பாடப் புத்தகங்கள் கிடைக் கும் வரையில், தமிழில் தேர்வு எழுத விரும்பும் மாணவர்களுக்குத் தனி வகையில் அனுமதி அளிக்கும்படி சட்டக் கல்வி இயக்குநர் யோசனை தெரிவித்துள்ளார். இது பற்றிப் பல்கலைக் கழகம் முடிவெடுக்க வேண்டி யிருந்தது. பல்கலைக் கழகம் முடிவெடுப்பதற்குக் கால தாமதம் ஏற் பட்டது. மாணவர்கள் இந்த ஆண்டு தமிழில் பரீட்சை எழுதுவதற்கு வழி வகுக்க வேண்டும் என்ற யோசனைக்கு, பல்கலைக் கழகம் 1975-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22-ஆம் தேதி அன்று நடைபெற்ற பல்கலைக் கழக ஆட்சிக் குழுக் கூட்டத்தில் தமிழை போதன மொழியாகக் கொண்ட சட்டக் கல்லூரி மாணவர்கள் இந்த ஆண்டு தமிழில் தேர்வு எழுத விரும்பினால், அதற்கு அனுமதி வழங்கலாம் என்று முடிவு செய்திருக் கின்றது. அப்படி எழுதுவதற்கு இப்போதே வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இரண்டாண்டு காலம் புத்தகங்கள் இல்லாது முதலில் படிக்க பல்கலைக் கழகம் ஒப்புக்கொண் டிருக்கின்றது. ஆகவே இந்தப் பிரச்சினை எழ வேண்டிய தேவையே இல்லை. ஆங்கிலத்தில் படித்து பிறகு தமிழில் எழுதலாம் என்று முதலில் விரிவாக அறிவிக்கப்பட்டிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது என்று அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1974-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் தேதி சட்டக் கல்லூரி இயக்குநர் எழுதியிருக்கின்றார்கள். 1974-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் தேதியி லிருந்து இதுவரையில் பல்கலைக் கழகத்திடமிருந்து பதில் வராததால் தான் இந்த நிலை ஏற்பட்டது. அப்போதே அந்தப் பதில் கிடைத்திருந் தால், இந்த நிலை வந்திருக்காது.